## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No.124/2019

| L.W.5 P.W.10 | | |
|---|---|---|
| Name: | சுகன்யா | Caste: |
| Father's Name: | செல்வராஜ் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:22/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026
(எதிரிகள் 1,2,4,5,7 ஆஜர். எதிரிகள் 3, 6, 9 ஆஜர் இல்லை. எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.)

**முன் விசாரணை:**

நான் தற்போது தென்னம்புலத்தில் குடியிருந்து கோயம்புத்தூர் மருத்துவமனையில் லேப் டெக்னீசியனாக வேலை செய்து வருகிறேன். நான் எனது அப்பா மற்றும் அக்கா சத்யா, சரண்யா மற்றும் நான் ஆகியோர் ஒன்றாக வசித்து வந்தோம். இந்த நிலையில் எனது அப்பா செல்வராஜ்–க்கும் சாந்தி என்பவருக்கும் திருமணத்தை மீறிய பழக்கம் இருந்ததாகவும், அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள இருந்ததாகவும் தெரிந்து கொண்டேன். இந்த விஷயம் தெரியவர எனது அம்மா, எனது அப்பா செல்வராஜிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள், நமக்கு 3 பெண் குழந்தைகள் இருப்பதாக கூறினார். அதற்கு எனது அப்பா நான் சாந்தி என்பரைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று தகாத வார்த்தைகளில் எனது அம்மாவை தேவடியா, குச்சிக்காரி என்று திட்டினார்.

கடந்த 11.02.2019 அன்று மறைஞாயநல்லூர், மாரியம்மன் கோவிலில் காலை 10.30 மணிக்கு எனது அப்பா, சாந்தி என்பவரை திருமணம் செய்து கொண்டு, காரில் ஏறும்போது நான் கோவிலிருந்து சுமார் 100 மீ. தொலைவிலிருந்து நான் பார்த்தேன். அப்போது இருவரும் சிவப்பு நிற காரில் ஏறி சென்றார்கள். இந்த திருமணத்தை முன்னிலை வைத்து நடத்தி வைத்தவர் மறைஞாயநல்லூரைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்பவராவார். இந்த திருமணத்தை உடன் இருந்து நடத்தி வைத்தவர்கள் எனது சித்தப்பா ஆசைத்தம்பி மற்றும் அவரது மனைவி சக்திப்பிரியா, சித்தப்பாவின் தங்கை

அமுதா, அமுதாவின் கணவர் வாசுதேவன், சாந்தியின் அம்மா முத்துலெட்சுமி மற்றும் மோகனா ஆகியோர்கள் ஆவார்கள்.

அப்பா செல்வராஜீம் சாந்தியும் திருமணம் முடித்து சென்ற கார் சிவப்பு நிற கார். சுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமானதாகும். இருவரும் திருமணம் முடித்து காரில் ஏறி செல்லும்போது அவர்கள் இருவரையும், எனது அக்கா கணவர் அசோகன் அவரது கைப்பேசியில் வீடியோ பதிவு செய்தார். அதனை விசாரணையின் போது காவல் துறையினரிடம் ஒப்படைத்தோம். அதன் பிறகு எனது அம்மா காவல்நிலையத்தில் நடந்த சம்பவத்தை கூறி புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

சம்பவ சமயத்தில் நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன் என்றால் சரி. அப்போது எனக்கு 15 வயது. எனது பாட்டியின் பெயர் மங்களத்தம்மாள். அவருக்கு சம்பவ சமயத்தில் வயது சுமாராக 90 இருக்கும் என்றால் சரி. எனது பாட்டி வயோதிகம் காரணமாக படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல. எனது பாட்டி வயோதிகம் காரணமாக படுத்த படுக்கையாக இருந்தபோது, அவர் இயற்கை உபாதைகள் படுக்கையிலே கழித்து விடுவார் என்றும், அதனை சுத்தம் செய்யத்தான் சாந்தி என்பவர் சுத்தம் செய்துவிட்டு சென்றுவிடுவார் என்றால் சரியல்ல.

எனது அப்பா 25 ஆண்டுகளாக மலேசியா நாட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரி. எனது அப்பா மலேசியாவிலிருந்து எனது அம்மாவிற்கு பணம் அனுப்பியுள்ளார் என்றால், சீட்டு கட்டவும், நகை சேர்க்கவும் பணம் அனுப்பினார். வீட்டு செலவிற்கு பணம் அனுப்பவில்லை. அவ்வாறு அனுப்பப்பட்ட பணத்தை எனது அம்மா அநாவசியமாக செலவு செய்து வந்தார் என்றும், அதனை தட்டிக் கேட்டார் என்பதால் தான் எனது அப்பாவிற்கு எதிராக பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் சென்றபோது ஐயர் வைத்து மந்திரம் ஓதியதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. ஆனால், எனது அப்பாவும் சாந்தியும் மாலை அணிந்துகொண்டு வந்து காரில் ஏறியதை பார்த்தேன். எனது அப்பாவும் சாந்தியும் மாலை அணிந்துகொண்டு வந்ததை

நான் பார்க்கவில்லை என்றும், அன்று நான் பள்ளிக்கு சென்றுவிட்டேன் என்றும், போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது அப்பா சம்பாதித்து கட்டிய வீட்டில் தான் நானும், எனது அம்மாவும் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல, அது எனது அப்பாவின் அப்பா சொத்தை விற்றுப் பெற்ற பணத்தை கொண்டு கட்டப்பட்ட வீடாகும், அதில் நாங்கள் குடியிருந்து வருகிறோம். மேற்படி வீடானது எனது அப்பாவின் அப்பா சொத்தை விற்றுப் பெற்ற பணத்தை கொண்டும், எனது அப்பாவின் சொந்த பணத்தைக் கொண்டு கட்டப்பட்ட வீடாகும் என்றால் சரியல்ல.

11.02.2019 அன்று நான் எனது அம்மாவுடன் புகார் கொடுக்க காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரி. மற்றவர்கள் சென்றார்கள். எனது மூத்த அக்காவின் திருமணத்தை எனது அப்பா தான் செய்து வைத்தார் என்றால் சரி. புகாரில் எனது அப்பா மற்றும் மற்ற அனைத்து எதிரிகளின் பெயரையும் குறிப்பிட்டு தான் புகார் கொடுக்கப்பட்டதா என்றால், அது பற்றி எனக்கு நினைவில்லை. எனது அப்பாவை தவிர மற்ற எதிரிகள் யாரும் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், பொய்யான வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாந்திக்கு மாரியப்பன் என்ற கணவர் உள்ளார் என்றால், அவர்களுக்கு விவாகரத்து ஆகிவிட்டது. மாரியப்பன் உயிருடன் உள்ளார் என்றால், சரி. சாந்திக்கு மகன் உள்ளார் என்றால், சரி. சாந்தியை மாரியப்பன் அடித்து விரட்டிவிட்டார். அதன் பிறகு தான் அவர் எனது அப்பாவை திருமணம் செய்து கொண்டார். சாந்திக்கும், மாரியப்பனுக்கும் விவாகரத்து ஆகிவிட்டது எனக்காட்ட, எந்த ஆவணமும் நாங்கள் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரி. எனது அக்கா கணவர் அசோகன் சாந்திக்கும், எனது அப்பாவிற்கும் நடைபெற்ற திருமணத்தை புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அசோகன் மேற்படி புகைப்படம் எடுக்கவில்லை என்றும், அது போலியானது என்றும், உண்மையாக இருந்திருந்தால் நிபுணர் மூலம் அதற்கான சான்று தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி புகைப்படத்தை இளையராஜா என்பவர் தான் எடுத்ததாக குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறைஞாயநல்லூர் மாரியம்மன் கோவிலுக்கும், வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும் சுமாராக 10 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரி. மேற்படி தொலைவை 15 நிமிடத்தில் அடைந்து, சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றைய தினமே புகார் கொடுத்திருக்க இயலும் என்றும், சம்பவம் நடைபெறாத காரணத்தால் தான் 11 நாட்கள் கால தாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடைபெறாத காரணத்தால் தான் கோவில் பூசாரி தியாகராஜன், அங்கு வேலை பார்த்த ஜோதி, இளையராஜா போன்றோர் மேற்படி சம்பவம் நடைபெறவில்லை என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பாவின் மீது உள்ள பயத்தின் காரணமாக அவர்கள் அவ்வாறு சொல்லியுள்ளார்கள்.

நானும், எனது அம்மாவும் எனது அக்கா கணவர் ஆகியோர் எனது அப்பா மற்றும் அவரது அம்மாவை வீட்டை விட்டு அடித்து விரட்டிவிட்டோம் என்றால் சரியல்ல. எனது பாட்டி நடமாட்டத்துடன் தான் இருந்தார். சம்பவ இடத்திற்கு நானும், எனது அம்மாவும் செல்லவில்லை என்றும், எனது அப்பா எனது அம்மாவை கெட்ட வார்த்தையால் திட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கெட்ட வார்த்தையால் திட்டினார். எனது அப்பாவின் வீட்டை அபகரித்துவிட்டு, நாங்கள் இந்த பொய்யான வழக்கை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 26.03.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam(F.A.C.)**